**ஜனவரி – 23**

# TNPSC துளிகள்

- மத்திய அரசின் பொதுப் பிரிவில் பொருளாதார ரீதியாக நலிவுற்றோர்க்கான 10% இட ஒதுக்கீட்டிற்கு எதிராக பொது நல வழக்கை ஏற்றுக் கொண்ட முதல் நீதிமன்றமாக சென்னை உயர்நீதிமன்றம் ஆகியுள்ளது.
    - இந்த வழக்கானது மாநிலங்களவை உறுப்பினரும் திமுக ஒருங்கிணைப்புச் செயலாளருமான R.S பாரதியால் தாக்கல் செய்யப்பட்டது.
- டெல்லி உயர்நீதிமன்றமானது 72 Hours – Martyr who never died எனும் திரைப்படத்தை வெளியிட அனுமதித்துள்ளது. இந்த திரைப்படமானது 1962 ஆம் ஆண்டு போர் நாயகனான ஜஸ்வந்த் சிங் ராவத்தின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.
    - 1962 ஆம் ஆண்டு போரின் போது இவர் புரிந்த வீரதீரச் செயலுக்காக அவரின் மறைவிற்குப் பின்னர் அவருக்கு மகாவீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.
- ஜெர்மனியில் முனிச் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்கை நுண்ணறிவில் அறநெறியியலுக்காக ஒரு கல்வி நிறுவனமொன்றை அமைப்பதற்காக 7.5 மில்லியன் டாலரை நிதியுதவியாக முகநூல் நிறுவனம் வழங்கியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஏறுதழுவுதலில் உலக சாதனை

- புதுக்கோட்டையின் விராலி மலையில் ஜனவரி 20 ஆம் தேதியன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியானது, விளையாட்டுத் திடலில் அதிக எண்ணிக்கையில் காளைகள் கலந்து கொண்டதால் உலக சாதனையைப் படைத்துள்ளது.
- இந்த பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் 1353 காளைகளும் 700 வீரர்களும் கலந்து கொண்டனர். இது முந்தைய பதிப்பைக் காட்டிலும் இருமடங்கு எண்ணிக்கை ஆகும்.
- நாட்டில் முதல்முறையாக ஜல்லிக்கட்டு நடைபெற்ற இடத்திற்கு அருகில் அறுவைச் சிகிச்சை செய்யும் வசதிகளுடன் கூடிய புறக்காயங்களுக்கான மருத்துவப் பிரிவு ஒன்று தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# தேசியச் செய்திகள்

## ஆயுதங்கள் தயாரிப்பு வளாகம்

- குஜராத்தின் சூரத்திற்கு அருகே உள்ள ஹஜிராவில் லார்சன் மற்றும் ட்யூப்ரோவால் உருவாக்கப்பட்ட ஆயுதங்கள் தயாரிப்பு வளாகத்தினை இந்திய பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்த ஆயுதத் தயாரிப்பு வளாகமானது நாட்டின் முதலாவது தனியார் நிறுவனமாகும். இங்கு K9 ரக வஜ்ரா தானியங்கி பீரங்கி துப்பாக்கிகள் தயாரிக்கப்படவுள்ளன.

- ஹஜிராவில் அமைந்துள்ள இந்த ஆயுதத் தயாரிப்பு வளாகமானது பாதுகாப்புத் துறையில் இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டத்தின் ஒரு சிறந்த உதாரணமாகும்.

## பாதுகாப்புத்துறை தயாரிப்பில் தற்சார்புடைமை மீதான தேசியக் கருத்தரங்கம்

- பாதுகாப்புத்துறை தயாரிப்பில் தற்சார்புடைமை மீதான 2-வது தேசியக் கருத்தரங்கம் ஐதராபாத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- இந்த தேசியக் கருத்தரங்கானது சுதேசப் பாதுகாப்புத்துறை தொழில்முனைவோர் கூட்டிணைவுடன் இணைந்து ஒருங்கிணைந்த தேசியப் பாதுகாப்புக்கான கருத்துக் களத்தால் நடத்தப்பட்டது.
- பாதுகாப்புத் துறை தயாரிப்பில் தற்சார்புடைமை மீதான முதல் கருத்தரங்கானது 2015-ல் ஐதராபாத்தில் நடத்தப் பட்டது.

## PWC-ன் உலகளாவியப் பொருளாதாரக் கண்காணிப்பு

- உலகளாவியப் பொருளாதாரக் கண்காணிப்பு அறிக்கையானது லண்டனை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டு நிபுணத்துவ சேவை அமைப்பான PricewaterhouseCoopers (PwC) என்ற அமைப்பால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் போக்குகள் மற்றும் பிரச்சினைகளைக் கண்காணித்து முன்னணி நாடுகளுக்கான சமீபத்திய மதிப்பீட்டு விவரங்களை அளிக்கின்றது.
- 2019 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களின் தரவரிசையில் இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகளானது ஐக்கிய ராச்சியத்தினை முந்தி உலகளாவிய அட்டவணையில் அதனை 5-வது இடத்திலிருந்து 7-வது இடத்திற்கு தள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த அறிக்கையானது உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை ஐக்கிய ராச்சியத்திற்க்கு 1.6% ஆகவும் பிரான்ஸ் நாட்டிற்கு 1.7% ஆகவும் இந்தியாவிற்கு 7.6% ஆகவும் மதிப்பீடு செய்துள்ளது.
- அமெரிக்கா உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாகவும் அதனைத் தொடர்ந்து சீனா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளும் உள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## $CO_2$ உமிழ்வைக் குறைக்க மெத்தனால் கலவை

- புனேவை அடிப்படையாகக் கொண்ட இந்திய தானியங்கி ஆராய்ச்சி சங்கமானது 15% மெத்தனாலைப் பெட்ரோலுடன் கலந்து 3000 கிமீ தொலைவுக்கு வாகனங்களை இயக்கி ஆய்வு செய்துள்ளது.
- இந்த ஆய்வானது தற்போதுள்ள BS-IV தரநிலையிலுள்ள கார்களில் மெத்தனால் கலந்து பெட்ரோல் பயன்படுத்தப்படும்போது $CO_2$ உமிழ்வானது கணிசமாக குறைவதை வெளிப்படுத்தியுள்ளது.

- உண்மையான கள நிலைகளில் உமிழ்வை மதிப்பீடு செய்வதும் அதே நேரத்தில் வாகனங்களின் செயல்திறன்களை சோதனை செய்வதுமே இந்த ஆய்வின் நோக்கமாகும்.
- மேலும் இந்த ஆய்வானது சிறிதளவு நைட்ரஜன் ஆக்சைடுகளை அதிகரிக்கும் போது ஹைட்ரோ கார்பன் உமிழ்வானது சற்றே குறைகிறது எனவும் கண்டறிந்துள்ளது.

## இரண்டு புதிய பாசி வகை ரோஜா இனங்கள்

- கர்நாடகாவின் பாகல்கோட் மாவட்டத்தின் பாதாமி மலைகளிலிருந்து இரண்டு புதிய இனங்களை தாவரவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த இனங்கள் போர்ட்டுலாகா பாதாமிகா மற்றும் போர்ட்டுலாகா லக்ஷ்மி நரசிம்மஹானியானா எனப் பெயரிடப்பட்டுள்ளன.
- பாதாமி மலைகளில் கண்டறியப்பட்டதால் போர்ட்டுலாகா பாதாமிகா இனத்திற்கு அப்பெயர் இடப்பட்டுள்ளது.
- தாவர வகைகளை வகைப்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை அளித்த பக்சிராஜன் லஷ்மி நரசிம்மனின் பெயர் போர்ட்டுலாகா லக்ஷ்மி நரசிம்மஹானியானா என்ற வகைக்கு இடப்பட்டுள்ளது.
- IUCN வகைப்பாட்டில் போர்ட்டுலாகா பாதாமிகா தரவு குறைவாக உள்ள பிரிவிலும் போர்ட்டுலாகா லக்ஷ்மி நரசிம்மஹானியானா உயர் அச்சுறு நிலையிலும் வைக்கப் பட்டுள்ளன.

## பழுப்பு நிற சிறிய மர வண்ணத்துப்பூச்சி

- சிக்கிமின் ஆய்வாளர்கள் 120 ஆண்டுகளுக்குப் பிறகு கஞ்சன்ஜங்கா தேசிய பூங்காவின் பக்கிம் என்ற பகுதியிலிருந்து பழுப்பு நிற சிறிய மர வண்ணத்துப்பூச்சி வகையைக் கண்டறிந்துள்ளனர்.



- இந்த பழுப்பு நிற சிறிய மர வண்ணத்துப்பூச்சி ஆனது சிக்கிமில் டி நிகிவில்லி எனும் அறிவியலாளரால் முதன்முதலில் 1887 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.
- லெத்தெ நிக்டெல்லா என்ற அறிவியல் பெயரால் அழைக்கப்படும் இது பழுப்பு நிற இறகுகளில் வட்டமான வெள்ளைப் புள்ளிகளுடன் காணப்படுவதால் இப்பெயர் பெற்றது.
- 50 மிமீ வரையிலான நீளமுடைய இறகுகளுடன் உடைய இது லெத்தெ இனத்தின் மிகச்சிறிய அங்கத்தினர் ஆகும்.

### யானைக்கால் நோய்க்கெதிரான 3 வகை மருந்துகள்

- மகாராஷ்டிராவானது உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து யானைக்கால் நோயை விரைவாக ஒழிக்க நாக்பூரில் 3 வகை மருந்து சிகிச்சையைப் பரிந்துரை செய்துள்ளது.
- பரவலாக யானைக்கால் நோய் என்றறியப்படும் நிணநீர் யானைக்கால் எனும் நோய் ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகும்.
- நடிகரான ஸ்வப்னில் ஜோஷி இந்த திட்டத்தின் விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நோயானது கொசுக்கள் மூலமாக பரவுகிறது. இதன் தொற்றானது பொதுவாக குழந்தைப் பருவத்தில் ஏற்பட்டு நிணநீர் மண்டலத்தின் மறைவான சேதத்திற்கு காரணமாகிறது.

## மாநிலச் செய்திகள்


### மது பாபு ஓய்வூதியத் திட்டம்

- மது பாபு ஓய்வூதியத் திட்டத்தின் (Madhu Babu Pension Yojana-MBPY) கீழ் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தில் மாதத்திற்கு 200 ரூபாய் உயர்வை ஒடிசாவின் முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.
- அம்மாநில அரசானது வயதானோருக்கான ஓய்வூதியம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை இணைத்து ஒரே திட்டமாக 2008 ஜனவரி 01 அன்று மது பாபு ஓய்வூதியத் திட்டத்தினை தொடங்கியது.
- ஆதரவற்ற வயோதிகர்களுக்கும் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கும் நிதியுதவி அளிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### 2018க்கான ICC விருதுகள்

- சர்வதேச கிரிக்கெட் குழுமமானது போட்டிகள் ஆண்டிற்கான அனைத்து வகை ஆட்டங்களுக்கும் முடிந்த பிறகு 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்களுக்கான விருதுகளை அறிவித்துள்ளது.
- இந்திய அணியின் தலைவரான விராட் கோலி ஒரே காலண்டர் ஆண்டில் ICCஇன் ஆண்டிற்கான 3 முன்னணி தனி நபர் விருதுகளைப் பெறும் முதல் ஆட்டக்காரராகி வரலாறு படைத்துள்ளார்.
- இவர் பெறும் விருதுகளாவன,
  - ICCஇன் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான சர்



கேர்ஃபீல்ட் சோபர்ஸ் டிராபி (தொடர்ந்து இரண்டாவது முறையாக)

- ICCஇன் ஆண்டிற்கான சிறந்த டெஸ்ட் போட்டியின் ஆட்டக்காரர்
- ICCஇன் ஆண்டிற்கான சிறந்த ஒருநாள் போட்டியின் ஆட்டக்காரர் (தொடர்ந்து இரண்டாவது முறையாக)

❖ ஆண்டிற்கான சிறந்த டெஸ்ட் போட்டி ஆட்டக்காரர் விருதை இவர் முதன்முறையாகப் பெறுகிறார்.

❖ மேலும் இவர் 2018 ஆம் ஆண்டிற்கான ஒரு நாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளின் சிறந்த அணித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

❖ விக்கெட் கீப்பர் மட்டையாளரான ரிஷப் பந்த் 2018-ல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தனது சிறந்த பங்களிப்பிற்காக ICC-ன் ஆண்டிற்கான வளர்ந்து வரும் சிறந்த ஆட்டக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


❖ நியூசிலாந்து அணியின் தலைவரான கேன் வில்லியம்சன் ICC ஸ்பிரிட் ஆப் கிரிக்கெட் விருதினைப் பெற்றார். குமார் தர்மசேனா சிறந்த நடுவர் விருதினைப் பெற்றார்.

❖ ஜிம்பாபே அணிக்கு எதிராக 76 பந்துகளில் 176 ஓட்டங்களை எடுத்த ஆரோன் பிஞ்ச் T20 போட்டியில் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டிற்கான விருதினைப் பெற்றார்.




## இதரச் செய்திகள்

### கபாடி நடவடிக்கை




❖ கார்கில் போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் நடத்தப்பட்ட கபாடி நடவடிக்கை எனும் பெயரிடப்பட்ட ஒரு நடவடிக்கையை “Line on Fire: Ceasefire Violations and India-Pakistan Escalation Dynamics” எனும் புத்தகம் வெளிப்படுத்தியுள்ளது.

❖ இந்த நடவடிக்கையின் திட்டமானது காஷ்மீருக்குள்

பயங்கரவாத ஊடுருவலைத் தடுக்கும் பொருட்டு 2001ம் ஆண்டு செப்டம்பரில் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் 25-30 பாகிஸ்தான் முகாம்களைக் கைப்பற்றுவதாகும்.

- இந்த நடவடிக்கையானது 9/11 பயங்கரவாதத் தாக்குதல் நடவடிக்கையின் தலையீட்டின் காரணமாகவும் இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தலைமையிலான சுதந்திரத்தினை நீட்டிப்பதற்கான நடவடிக்கை எனும் நடவடிக்கை தொடங்கியதாலும் வெளிப்படையாகவே கைவிடப்பட்டது.
- இந்த புத்தகமானது JNUவின் கல்விப் பேராசிரியரான ஹேப்பிமோன் ஜேக்கப் ஆல் எழுதப்பட்டது.

- - - - - - - - - - - - - - -